உண்மையாகும். எதிர்க் கட்சியினர் அதைப் பாராட்டும்போது அரசாங்கம் வேறு தனித்துப் பாராட்ட வேண்டுமென்று சொன்னாலும் பொதுமக்களும் இன்றைக்கு போக்குவரத்துத் தொழிலாளர்களை இந்த வகையில் பாராட்டிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

திரு. மா. வெ. கரிவேங்கடம்: பேருந்துகள் எல்லாம் இப்படிப்பட்ட போராட்டங்களில் ஏராளமாக அழிக்கப்படுகின்றன, கண்ணாடிகள் எல்லாம் நொறுக்கப்படுகின்றன, பேருந்துகள் கொளுத்தப்படுகின்றன, இவை நம் அரசுக்கு ஏற்படுகிற ஒரு பெரிய இழப்பு. ஆகவே இத்தகைய சமூக விரோத சக்திகளிடமிருந்து அதற்குண்டான மதிப்பீட்டை நஷ்டயீடாகப் பெறுகிற வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படுமா? அதற்கான சட்டத்தைக் கொண்டு வதற்கு அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நம்முடைய அரசு பேருந்து வண்டிகளை நாசப்படுத்த முனைகிறவர்கள் சமூக விரோத சக்திகள் மாத்திரம் என்று சொல்லிவிட முடியாது. தேசியமயமாக்கும் கொள்கைக்கு விரோதமாக இருப்பவர்களும் அதில் நுழைந்திருப்பதாகத் தோன்றுகிறது.

Madras-Hosur Express bus service

* 38. *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there is any proposal before the Government to introduce night bus service under the auspices of Transport Department from Madras to Hosur; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH: On behalf of Hosur and Denkanikota taluks, I express my gratitude to the Hon. Minister for Transport for having conceded our request and introduced express buses from Bangalore to Madras via Hosur. There is a huge traffic via Hosur and it often becomes a bottleneck. In spite of so many buses it becomes inadequate for passengers. There is great demand for buses from Hosur to Tirupathi and Kolar gold fields. May I know from the Hon. Minister whether he would consider introducing such buses in those routes from Hosur?

THE HON. THIRU S. RAMACHANDRAN : As the hon. Member has rightly pointed out, already there are services running from Bangalore to Madras via Hosur. If necessary, the frequency can be increased with reservation at Hosur for passengers at Hosur so as to enable them to get into the bus. I feel there is no necessity to run a separate bus from Hosur to Madras City.

திரு. எம். தேவராசன் : உதகையிலிருந்து பங்களூருக்கு விரைவுப் பேருந்துகள் விடுவதற்கு நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மைசூர் அரசுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியதாகத் தெரிகிறது. ஆனால் இதுவரையில் எந்தவிதமானதொரு நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. விரைவில் அந்தப் பேருந்துகள் விடப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மைசூர் அரசோடு நடத்திய பேச்சுவார்த்தைகளில் இந்த வழித்தடங்கள் எல்லாம் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். விரைவில் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. நா. வீராசாமி : நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அரசாங்கப் பஸ்கள் கொளுத்தப்படுவது, நாசப்படுத்தப்படுவது இப்படிப்பட்ட காரியங்களை சமூக விரோதிகள் மட்டுமல்லாமல் தேசியமயமாக்கும் கொள்கைக்கு விரோதமாக இருக்கக்கூடியவர்களும் செய்கிறார்கள் என்று சொன்னார்கள். எனக்குத் தெரிந்து பலயிடங்களில், தனியார்கள், பஸ் முதலாளிகள் இப்படி அரசாங்கப் பஸ்களை நாசப்படுத்துவதன் மூலம் அரசாங்கம் இந்தக் கொள்கையை கைவிட்டு விடும் என்ற எண்ணத்தோடு நிறையப் பணம் சேர்த்து இப்படிப்பட்ட வேலைகளைச் செய்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அதுபற்றி அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கருத்தை நான் முற்றிலும் மறுக்கமுடியாது.

திரு. என். கணபதி : சேலத்தை தலைமை நிலையமாகக் கொண்டு அண்ணா போக்குவரத்துக் கழகம் என்றதொரு கழகம் அமைக்கப்படவிருக்கிறதா? அந்த அண்ணா போக்குவரத்துக் கழகம் சேலம்-ஹோசூர் பகுதிகளை பேருந்துகளால் இணைக்கும் முயற்சியில் ஈடுபட இருக்கிறதா?

1972 டிசம்பர் 4]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நாடு முழுவதும் பஸ்களை எல்லாம் நாட்டுடைமையாக்கவேண்டும் என்கிற நல்லெண்ணத்தில் சேலம், தர்மபுரி, வட ஆர்க்காடு ஆகிய மூன்று மாவட்டங்களையும் சேர்த்து ஒரு போக்குவரத்துக் கழகம் நிறுவவேண்டுமென்றும் அதற்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரை இடவேண்டும் என்றும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஏற்கனவே உத்தரவிட்டிருக்கிறார்கள். அவ்வகையில் அப்போக்குவரத்துக் கழகம் சேலத்தை தலைமையகமாக வைத்து வருகிற ஆண்டு ஜனவரி முதல் தேதியில் இருந்து இயங்க ஆரம்பிக்கும்.

திரு. இ. ராமசாமி: பொள்ளாச்சியிலிருந்து வால்பாறை மலைப் பகுதிக்கு சில எஸ்டேட்களுக்கு நேரடி பஸ் இருந்தது. 1-ம் தேதியிலிருந்து அது வால் பாறையில் நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே கடந்த காலங்களில் எப்படி நேரடியாக பஸ் இருந்ததோ அதேபோல் விடுவதற்கு அரசாங்கம் ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனை கருத்தில் கொள்ளப்படும்.

திரு. ஆ. பரந்தாமன்: சமூக விரோதிகளால் ஏற்படுகிற இந்த நஷ்டத்தைத் தவிர்ப்பதற்கு அரசாங்கப் பஸ்கள் இன்ஷூர் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அரசாங்க போக்குவரத்து பஸ்களைப் பொறுத்தவரையில் அரசாங்க போக்குவரத்து இலாகாவில் ஒரு இன்ஷூரன்ஸ் பகுதி வைத்து அதற்கான ஏற்பாடுகளை கவனித்துக்கொண்டு வருகிறார்கள். சமூக விரோதிகளால் சர்க்கார் உடைமைகளுக்கு மட்டுமல்லாமல் சமூகத்திற்கே நஷ்டம் என்று சொல்லும்போது நாம் என்ன செய்ய முடியும்.

திருமதி வி. ப. பழனியம்மாள்: சென்னை நகரில் ஓடிக்கொண்டிருக்கும் பஸ்களுக்கு மாணவர்களால் அதிக இடைஞ்சல் ஏற்படுகின்றது. அது பொது மக்களுக்கும் பெரிய இடையூறாக இருக்கிறது. எனவே, கல்லூரி மாணவர்களுக்கு அந்தந்தக் கல்லூரிகளே பஸ்கள் விடவேண்டும் என்ற ஒரு ஏற்பாட்டை செய்ய அரசு முன்வருமா? அல்லது அரசாங்கமே கல்லூரி மாணவர்களுக்கு என்று தனியாக ஒரு பஸ் விடுவதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் அப்படிப்பட்ட ஆபத்து ஒன்றும் இப்போது நேர்ந்துவிடவில்லை.

[1972 டிசம்பர் 4

திரு. எஸ். கணேசன் : நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகளை அண்மைக் காலத்தில் வன்முறையாளர்கள் காசில்லாமல் அவற்றை விளம்பரப் பலகைகளாக உபயோகப்படுத்துகிறார்களே, இதற்கு ஒரு ஒழுங்குமுறை இல்லையா? இப்படிச் செய்தவர்கள் எத்தனை பேர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஏற்கனவே அறிவித்ததைப் போல் இத்தகைய செயல்களில் ஈடுபட்டவர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு ஆய்வில் இருக்கின்றன.

திரு. எம். ஏ. லத்திப் : இப்படி வன்முறைச் செயல்களில் ஈடுபடுகின்றவர்கள் சமூக விரோத சக்திகள் மட்டுமல்லாமல் மற்றவர்களும் ஈடுபடுகிறார்கள். ஆகவே, நஷ்டயீடு பெறமுடியாது என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். முன்னேற்றத் திட்டங்கள் நிறைவேற்றப்படும் இடங்களில் பெட்டர்மென்ட் டாக்ஸ் என்று போடுகிறார்கள். அந்தமாதிரி, நாச வேலைகள் செய்யும்போது, அரசாங்கச் சொத்துக்களுக்கு நஷ்டம் ஏற்படும்போது பெனல்டி டாக்ஸ் என்ற வகையில் ஒரு டாக்ஸ் போட அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுபற்றி சட்டப் பிரச்னைகளை ஆராய வேண்டும்.

*** திரு. ப. முத்துசாமி :** இப்போது தேசியமயமாக்கப்பட்ட பஸ்கள் ஓடும் இடங்களில் காண்ட்ராக்ட் பஸ்களும் ஓடிக்கொண்டிருப்பதால் அரசாங்க பஸ்களிலிருந்து வருகிற வருமானம் குறைந்துவருவது அரசுக்குத் தெரியுமா? ஆகவே சட்டப்பூர்வமாக அந்த பஸ்கள் ஓட்டுவதை தடுப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதற்கான நடவடிக்கைகளை அரசு விரைவில் மேற்கொள்ள இருக்கிறது.

திரு. சி. பாண்டுரங்கன் : சென்னையிலிருந்து செங்கம், திருவண்ணாமலை வழி சேலம், கோவைக்கு ஏற்கனவே மூன்று பஸ்கள் ஓடிக்கொண்டிருந்தன. இப்போது அந்த மூன்றில் இரண்டு போக ஒன்று தான் ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த ஒன்றும் சிலநேரங்களில் நின்று விடுகிறது. ஆகவே சென்னையிலிருந்து செங்கம், திருவண்ணாமலை போன்ற இடங்களுக்குச் செல்வதற்கு மிகவும் கடினமாக இருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செங்கத்திலிருந்து சென்னை, சென்னையில் இருந்து செங்கம் செல்வதற்கு குறைந்தபட்சம்

1972 டிசம்பர் 4]

திருவண்ணுமலை வரையிலும் செல்லும் பஸ்களை சென்னையிலிருந்து செல்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் பலமுறை கேட்டிருக்கிறேன். ஆனுல் இதுவரையிலும் அதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே தயவுசெய்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் உடனடியாக எடுப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர்களே பதில் சொல்லி விட்டார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: உறுப்பினர் அவர்கள் செங்கத்திலிருந்து விரைவுப்பேருந்து விடவேண்டுமென்று கேட்கிறார்கள். பொதுவாக சென்னையிலிருந்து 150 மைல்களுக்குள்ளாகயிருக்கிற பகுதிகளுக்கு விரைவுப் பேருந்துகளுக்கு அதிகக் கட்டணம் இருப்பதால் அதிகப் பயணிகள் ஏறுவதில்லை, சாதாரண பஸ்களில்தான் செல்கிறார்கள். கிலோ மீட்டருக்கு மூன்று பைசா என்ற அளவில் கட்டணம் சிறிது குறைவாகயிருப்பதால் சாதாரணப் பேருந்துகளை மக்கள் விரும்புகிறார்கள். அந்த வகையில்தான் செங்கம், செஞ்சி போன்ற பகுதிகளுக்கு விரைவுப் பேருந்துகள்விட முடியாத சூழ்நிலை இருந்து வருகிறது. ஆனுல் ஒவ்வொரு உறுப்பினரும் ஒவ்வொரு ஊருக்கும் எக்ஸ்பிரஸ் பஸ் விடவேண்டும் என்று கேட்டால் இப்போதிருக்கிற பேருந்து வழித்தடங்களையெல்லாம் மாற்றியமைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும் என்ற காரணத்தினுல் உடனடியாகச் செய்ய இயலவில்லை. இருந்தபோதிலும் நேராக வரும் சூழ்நிலையிருக்குமானுல், பயணிகள் நிறைய இருந்தால் உறுப்பினர் அவர்களின் யோசனையை அரசு கவனத்தில் கொண்டு செய்யலாம்.

திரு. சொ. காவேரிமணியம்: சமீபத்தில் நடந்த அராஜகம், வன்முறை காரணமாக கொளுத்தப்பட்ட, எரிக்கப்பட்ட பஸ்களை நாட்டு மக்களின் உணர்வைக் கிளம்பும்பொருட்டு அந்த அந்த மாவட்டங்களின் தலைநகரங்களில் அவற்றை ஊர்வலமாக எடுத்துச் சென்று மக்களின் உள்ளங்களில் அந்த உணர்வை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இதுபோல் பொதுச்சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பதை பொது மக்கள் நிச்சயமாக அனுமதிப்பதில்லை. அவற்றை ஊர்வலமாக எடுத்துச் செல்வதற்குப் பதிலாக எப்போதெல்லாம் தேர்தல் வருகிறதோ அப்போது இப்படிப்பட்ட சக்திகளுக்கு சரியான பாடத்தைப் புகட்டுகிறார்கள்.